23rd January 1965] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

நிருவாகத்தினர் மீறியிருக்கிறார்கள். ஏறத்தாழ இரண்டாயிரம் தொழிலாளிகள் இப்பொழுது வேலையில்லாமல் சபிக்கிறார்கள். தொழிற்சாலை ஸ்தம்பித்து இருக்கிறது. துரிதமாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதற்காகத்தான் நான் இந்த பிரேரணையைக் கொடுத்திருக்கிறேன். இந்த தொழிலாளர்கள் பட்டினியால் வாடி வருகிறார்கள். தவறான காரியங்களில் அவர்கள் ஈடுபடவில்லை. கனம் முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து இரண்டு மூன்று தடவை நான் பேசியிருக்கிறேன். நேற்றுக்கூட அவர்களுடைய பிரதிநிதிகள் இங்கே வந்து அவரைச் சந்தித்து பேசினார்கள். அவர்கள் அமைதியாகத்தான் இருக்கிறார்கள். இந்த நிலையில் ஊர்வலங்களையும் கூட்டங்களையும் தடை செய்து 144 தடையுத்தரவு விதித்து இருக்கிறார்கள். நிருவாகத்தின் பிடிவாதம் காரணமாகத்தான் அங்கே கிளர்ச்சி இருக்கிறது. நிருவாகத்தின்மீது எந்த நடவடிக்கையையும் எடுக்காமல், கூட்டங்களுக்குத் தடையுத்தரவு விதித்ததின் காரணமாக நிருவாகத்தினருக்கு மேலும் தெம்பு ஏற்பட்டு அவர்கள் பிடிவாதமாக இருப்பதற்குத்தான் துணையாக இருக்கும். பெருமளவுக்கு தொழிலாளிகள் பாதிக்கப்பட்டிருப்பதால் இதைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்று, இந்த பிரேரணையை நான் இங்கே கொண்டு வந்திருக்கிறேன்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் அங்கத்தினர் நேற்றும் அதற்கு முன்பும் இதைப் பற்றி என்னிடம் பேசினார்கள். அவர்களுக்கே தெரியும். சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை எடுக்க முடியுமோ, அவற்றை எடுத்துக் கொண்டிருக்கிறது. சட்டம் குறுக்கே நிற்பதால் அதற்கு மேல் நடவடிக்கைகள் எடுக்க முடியாது என்பது அவர்களுக்குத் தெரியும். செக்ஷன் 144 தடை உத்தரவு தொழிலாளிளுக்கு மாத்திரம் அல்ல. நிர்வாகஸ்தர்களுடைய தவறான போக்கை ஓட்டிப் போடப்பட்டது அல்லது போடுவதாக உத்தேசம் இருந்தது என்பதும் அவர்களுக்குத் தெரியும். நேற்று கலியாணசுந்தரம் அவர்கள் இதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். எழுதிக் கொடுத்தார்கள். எதிர்க்கட்சித் தலைவர்களும் என்னிடம் நேற்று கூறி, இன்று பிரதிநிதிகள் பேசவேண்டும் என்றும் சொன்னார்கள். நேற்று கலியாணசுந்தரம் அவர்கள் கொடுத்ததை, காரியதரிசிக்கு அனுப்பித்து, மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று கவனிக்குமாறு சொல்லியிருக்கிறேன். ஆகவே இதிலே ஒத்திவைப்புப் பிரேரணைக்கு இடமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER: There is no point for an Adjournment motion. I, therefore, withhold consent to it.

IV. USE OF UNPARLIAMENTARY EXPRESSIONS IN THE HOUSE.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். என்னைப் பற்றி இரண்டு தினங்களுக்கு முன்பாக திரு. கலியாணசுந்தரம் அவர்கள் ஒரு வாதத்தைக் கிளப்பினார்கள். நான் ஏதோ அவரைப் பற்றியும், அவருடைய கட்சியைப் பற்றி

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] [23rd January 1965

யும் தனிப்பட்ட முறையில் கூறினேன் என்று சொன்னார்கள். தங்களுடைய சிரிய தலைமையின்கீழ் பணி ஆற்றி வருகிற இந்தக் காரியாலயத்தில் உள்ள ரிப்போர்ட்டர்கள் எடுத்த குறிப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. அந்தக் குறிப்பில் உள்ளதை நான் படிக்கிறேன்: "நாங்கள் தேசத் துரோகம் செய்கிறோம்" என்கிறார்கள். என்ன துரோகம் செய்தோம்? . . . .

MR. SPEAKER: The hon. Member need not go into the details.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: நான் அவ்வாறு சொல்லவில்லை என்பதற்காகத்தான் இதைக் குறிப்பிடுகிறேன்.

MR. SPEAKER: As already stated by me, I will go through the speeches of three or four hon. Members and the hon. Member can be rest assured that I will do what is necessary.

SRI V. KRISHNAMOORTHY: Even though there is nothing in the proceedings of the House, it has appeared in the Press. It affects my interest and affects my very freedom here, Sir. Though I have not stated like that, the hon. Member Sri M. Kalyanasundaram has assumed that. The Reporters who are functioning under your authority have reported the speeches and there is no such thing in the proceedings. I request the Hon. Speaker to kindly expunge the remarks made by the hon. Member Sri M. Kalyanasundaram against me from the proceedings. I request the Hon. Speaker to give his decision in the matter.

V. PRIVILEGE MATTER.

ALLEGED DELAY IN THE IMPLEMENTATION OF FOUR LAND TENURE ACTS.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, நான் ஒரு உரிமைப் பிரச்னையை இந்தச் சபையில் கொண்டு வர வேண்டுமென்று தங்களுடைய அனுமதியை நேற்று கோரியது தங்களுக்கு ஞாபகம் இருக்கும். இந்தச் சபையில் நிறைவேற்றப்படக்கூடிய சட்டங்கள் உடனே அமல் நடத்தப்படவேண்டும் என்பதுதான் இந்தச் சபையின் விருப்பம். சட்டங்களையோ தீர்மானங்களையோ நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு நிர்வாகத்தினிடம் இருக்கிறது. நிர்வாகம் என்று சொல்லும்பொழுது, அமைச்சர்களை மட்டும் நான் குறிப்பிடவில்லை. அமைச்சர்களும், நிர்வாக இலாகாக்களும் சேர்ந்துதான் நிர்வாகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்தச் சபையில் நிறைவேற்றப்படும் சட்டங்களை நிறைவேற்றுவதிலே நிர்வாகம் அவற்றை முறியடிக்கக்கூடிய வகையில் காலதாமதம் செய்தால், அது இந்தச் சபையின் நோக்கத்தை முறியடிப்பதாகும். இந்தச் சபையின் முக்கியத்துவத்தைக் குறைத்து எண்ணக்கூடிய, கேவலமாக நினைக்கக்கூடிய நிலைமை ஏற்படும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தச் சபையில் மூன்று இனும் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, விவசாயிகளுக்கு இனும் நிலங்கள் கொடுக்கப்பட வேண்டும்,